DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 138/2024

PROSECUTION WITNESS No - PW- 8

| | | | |
|---|---|---|---|
| Name : | மருத்துவர்.சந்திரசேகர் | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of October 2024.

எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்

சாட்சி காணொலி காட்சி வாயிலாக ஆஜராகி அரசு வழக்கறிஞரால் அடையாளம் காட்டப்பட்டு முதல் விசாரணை

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது அரசு மதுரை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சாட்டம் சார்ந்த மருத்துவதுறையில் பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 27.06.2014ம்தேதி அதே மருத்துவமனையில் உதவிபேராசிரியராக பணியிலிருந்தபோது திருப்புவனம் காவல்நிலைய ஆய்வாளர் காவலர் ராஜ்குமார் என்பவர் மூலம் கொடுத்து அனுப்பிய வேண்டுகோள் கடிதம் பெற்று, திருப்புவனம் காவல்நிலைய குற்றஎண்.251/14 சம்மந்தப்பட்ட இறந்துபோன சங்கரநாராயணன் என்ற 58 வயது மதிக்கத்தக்க ஆண்பிரேதத்தை பிற்பகல் 1.40 மணிக்கு பிரேத பரிசோதனை செய்தேன்.

பிரேதம் அங்கமச்ச அடையாளம் சரிபார்க்கப்ட்டு காவலரால் அடையாளம் காண்பிக்கபட்டு பிரேத பரிசோதனை துவங்கினேன். உடல்முழுவதும் பிணவிரைப்புத்தன்மை காணப்பட்டது. சுமாரான ஊட்டத்துடன் 58 வயது மதிக்கத்தக்க ஆண்பிரேதம் கை, கால் விரல்நகங்கள் நீலநிறத்தில் இருந்தன. இறப்பிற்கு முன்பு ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு:

1. இடதுபுருவத்திற்கு மேலாக 3x1செமீ அளவிலான எலும்பு ஆழம் வரையிலான சிதைந்த காயம் காணப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.23 17:43:06 +0530

2. நெற்றியின் இடதுபுரம் 3x1செமீ அளவிலான மூளையின் ஆழம் வரை ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.

3. தலையின் இடதுபக்கவாட்டு பகுதியில் இடதுகாது எலும்பிற்கு 10செமீ மேலாக 4x1செமீ அளவிலான மூளையின் ஆழம் வரை ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.

4. 3வது காயத்திற்கு 1செமீ மேலாக தலையில் இடதுபக்கவாட்டு பகுதியில் 2x1செமீ அளவிலான மூளையின் ஆழம் வரை ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.

5. தலையின் வலது பக்கவாட்டு பகுதியில் வலதுகாது எலும்பிற்கு 9செமீ மேலாக 2x1செமீ அளவிலான மூளையின் ஆழம் வரை ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.

6. கழுத்தின் இடதுபின்புரத்தில் 5x1செமீ அளவிற்கு சிராய்ப்புக்காயம் காணப்பட்டது.

7. வலது முழங்கையின் பின்புரம் 4x2செமீ அளவிற்கு ஒரு சிராய்ப்புக்காயம் காணப்பட்டது.

8. கழுத்தின் இடதுபுரம் 4x1செமீ அளவிற்கு ஒரு சிராய்ப்புக்காயம் காணப்பட்டது.

தலையின் வெட்டுத்தோற்றத்தில் தலை தோளுக்கு அடியில் முழுவதும் கன்றிய காயம் காணப்பட்டது. மண்டைஓடு முழுவதும் பலதரப்பட்ட அளவுகளில் உடைந்து காணப்பட்டது. மூளையின் உட்புறம் 8x6செமீ அளவிலும், இடதுபக்கவாட்டு பகுதியில் 4x3செமீ அளவிலும் மூளையின் வலது புறத்தில் 3x3செமீ அளவிலும் ஒரு கன்றிய காயங்கள் காணப்பட்டது. மண்டைஓட்டின் அடித்தளத்தின் உட்பகுதியில் இருபுறமும் உடைந்து காணப்பட்டது. மற்ற உறுப்புகளில் எவ்வித மாற்றமும் இல்லை. இறந்தவர் அவருக்கு ஏற்பட்ட தலையில் ஏற்பட்ட காயத்தால் இறந்திருக்கலாம் என சான்றளித்தேன்.

ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ 7**, படிவம் 86 **அ.சா.ஆ. 8** பிரேத பரிசோதனை அறிக்கை, **அ.சா.ஆ.9** சீராலஜி அறிக்கைகள் **அ.சா.ஆ.10** பயாலஜி அறிக்கை **அ.சா.ஆ. 11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

இறந்தவரது உடலில் ஏற்பட்ட சிராய்ப்புக்காயங்கள் அவரை காயத்துடன் சிமிண்ட் தரையில இழுத்துச்செல்லம்போது ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. தலையில ஏற்ட்ட காயம் இரும்புக்கம்பியால் தாக்கும்போது ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. இறந்துபோனவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு பின்னர் அவர் பலனின்றி இறந்துபோனதால் இறப்பிற்கான நேரம் குறித்து நான் கருத்துரை பிரேதபரிசோதனை அறிக்கையில் வழங்கவில்லை.

இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.23 17:43:13 +0530

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

சிகிச்சை அளித்தது சம்மந்தமான ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் ஞாபகமில்லை அது சம்மந்தமான குறிப்பு நான் எழுதி வைக்கவில்லை மேலும் 10வருடங்களுக்கு மேல் ஆனதால் எனக்கு ஞாபகமில்லை. ஆயுதம் கூர்மையாக இருந்திருந்தால் குத்துக்காயம் ஏற்பட்டிருக்கும். மழுங்களாக இருந்திருந்தால் சிதைந்த காயம் ஏற்பட்டிருக்கும். காவல்ஆய்வாளர் என்னிடம் கருத்துரை பெற்றது சம்மந்தமாக நான் கோப்பில் குறித்து வைத்துள்ளேன். ஆய்வாளர் விசாரிக்கும்போது ஆயுதத்தை காட்டியதாக குறிப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.23 17:43:19 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை